# குறுந்தொகை காட்டும் இல்லற மாண்புகள்

**முனைவர் சி.முத்தழகு**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

எஸ்.ஆர்.எம் திருச்சி கலை அறிவியல் கல்லூரி

சமயபுரம் அருகில், இருங்களூர், திருச்சிராப்பள்ளி-621105.

**ஆய்வுச் சுருக்கம்**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர்களின் வாழ்க்கை பற்றிய உண்மைப் பதிவேடு சங்க இலக்கியங்கள், ஒப்பில்லாத உயர்ந்த இலக்கியமாகவும் திகழ்கிறது. முன்னோர்களின் வாழ்வியல் அனுபவங்களே காலங்காலமாகச் சொல்லப்பட்டும் எழுதப்பட்டும் வருகின்றன. நிகழ்காலச் சமுதாயத்திற்கும் வருங்காலச் சந்ததிகளுக்குமான நல்ல அறிவுத்திறவுகோள்கள் அவையே. மனிதன் தன் வாழ்க்கையைப் பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையே உடலுக்கும் உயிருக்குமான நட்பு அகம் சார்ந்ததாகவும், பிறப்பிற்கும் இறப்பிற்குமான வாழ்க்கை புறம் சார்ந்ததாகவும் வாழ்ந்தான். ஒத்த ஆணும் பெண்ணும் உடலாலும், உள்ளத்தாலும் இரண்டறக் கலந்து வாழ்தலே இல்லறமாகும். அன்புடைய நெஞ்சங்கள் வாழ்க்கைத் துணையாகின்றன. இத்தகைய இனிமையான மாண்பினை குறுந்தொகை பாடல்கள் வழி காணலாம்.

**முன்னுரை**

இல்வாழ்க்கை என்பது ஆடவர்க்கு மட்டுமோ அல்லது பெண்டிர்க்கு மட்டுமோ உரிமையுடையது அன்று இல்லம் என்பது இருவருக்குமே உரிமை உடையதாகக் கருதப்படுகிறது. இல்லறம் துறவறம் ஆகிய இரண்டிலும் இல்லறமே முதன்மை பெற்று விளங்குகிறது. துறவறத்திற்கும் துணையாக அமைவது இல்லறமாகும். இல்வாழ்க்கை என்பது மனைவியோடு கூடி வாழும் சிறப்பினை உடையது. பண்பாட்டு வளர்ச்சியில் ஒரு முக்கியமான கூறு ஒற்றுமை நிறைந்த குடும்பம் ஆகும். சங்க காலத்தில் களவொழுக்கம் மலிந்திருந்தது. எனினும் அக்களவொழுக்கம் கற்பொழுக்கமாக மலர வேண்டும் என்னும் கட்டுப்பாடும் மிகுந்திருந்தது. களவு ஒரு குறிக்கோள் அன்று முடிவான பயன் அன்று. ஒரு குறிக்கோளை முடிந்த பயனை அடைதற்கு உரிய நெறியேயாம். களவின் முடிவு கற்பு என்பது அகத்திணை வலியுறுத்தும் அறங்களுள் தலையாயது என்பார் தமிழ்க் காதலை ஆராய்ந்த அறிஞர் வ.சுப.மாணிக்கம் அன்புடையக் காதலர் களவொழுக்கத்தில் ஈடுபட்டபோதும் தாய் தந்தையர் விருப்பத்தையும் பொருட்படுத்தினர் என்பதை

> **“கற்பெனப் படுவது கரணமொடு புணரக்**
> **கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்**
> **கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே”**

**“கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே**

**புணர்த்துடன் போகிய காலையான”**

(தொல்.பொருள்.கற்பியல் -1,2)

தொல்காப்பிய நூற்பாக்கள் எடுத்துரைக்கின்றன எனவே வரைவு கடாதல், அறத்தொடு நிற்றல் முதலியன நிகழ்ந்த பின்னர்க் காதலர் வாழ்வில் திருமணம் நடைபெறும் இதற்கு வழிவகை செய்வது ‘கரணம்’ என்னும் வதுவைச் சடங்கு ஆகும். திருமணம் முற்றுப்பெற்றபின், ஆணும் பெண்ணும் இணைந்து நடத்தும் இல்லற வாழ்வினை குடும்பத்தின் மாண்பினை சங்க இலக்கியமான குறுந்தொகை வழிநின்று இக்கட்டுரை காட்டுகின்றது.

**இல்லறம்**

நாடோடியாக வாழ்ந்து கொண்டிருந்த மனிதன் நிலையான வாழ்க்கையை வாழவும் முறையான இல்லறத்தை மேற்கொள்ளவும் குடும்ப அமைப்பு உருவாக்கப் பெற்றது. மனித நாகரிகத்தின் சிறந்த அடையாளம் நல்ல குடும்பம். இல்லற வாழ்க்கையை நல்ல முறையில் நடத்தினால் அதை காட்டிலும் இனிய வாழ்வு வேறு இல்லை என்பதை குறுந்தொகை பாடல் வழி அறியலாம்.

**மனையுறை வாழ்க்கை வல்லியாங்கு,**

**மருவின் இனியவும் உலாவோ** (குறுந்-322)

என்ற அடிகள் அவ்வுண்மையைக் காட்டும். இக்கருத்தே

**அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்**

**பொஒய்ப் பெறுவதெவன்** (குறள்-46)

என்று திருக்குறளில் இல்வாழ்க்கைப் பற்றி கூறுவதைக் காணலாம். இல்லறம் சிறப்பாக நடைபெற வேண்டுமானால் காதலனும் காதலியும் கருத்து ஒத்து அன்புடையவர்களாக வாழ வேண்டும். இத்தம்பதிகள் தான் இல்லறத்தில் இன்பங்காண்பர் என்பது பழந்தமிழர் கருத்தாகும்.

**இல்லத்தலைமை**

குடும்பத்தில் ஆடவனே தலைவன். இது பண்டையக் காலத்திலிருந்தே எல்லா நாடுகளிலும் பரவியிருந்த ஒன்று பொருளீட்டுதல் பெரும்பாலும் ஆடவர் கடமையாக இருந்தது.

“**வினையே ஆடவர்க்குயிரே வாள் நுதல்**

**மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்”** (குறுந்-135)

எனக் குறுந்தொகை இல்வாழ்க்கையின் ஆடவர் மகளிர் பொறுப்புக்களைப் போற்றி உரைக்கும். வெளியுலக வாழ்க்கையில் ஈடுபடும் இல்லத் தலைவன் இல்லத்தின் நலத்தையும் சமூக நலத்தையும் நாட்டின் நலத்தையும் சிந்திப்பான். அவனாலேயே அறச்செயல்களிலும், பொருளீட்டும் முயற்சியிலும் இன்னது செய்யப்படவேண்டும் எனத் துணிந்து செயல்படுவான்.தற்காலத்தில் பெண்கள் வெளியுலக வாழ்க்கையில் ஆண்களுக்கு நிகராக ஈடுபடுகின்றனர். குடும்பத்தையே உயர்த்துகின்றனர். பெண்களே நாட்டின் தலைவிகளாக இருக்கும் இக்காலத்திலும் கூட இல்லத்தில் தலைமை பெரும்பாலும் ஆடவருக்கே உரியதாக இருப்பதை காணமுடிகிறது.

பண்டைத் தமிழர் இல்லற வாழ்வில் உயர்ந்த கொள்கைகளைக் கொண்டிருந்தனர். வாழ்க்கையை அறமாகக் கண்டனர். கணவன் மனைவி குழந்தை சுற்றம் என்ற எல்லையைக் கடந்து அனைத்து உயிருக்கும் அருள் செய்யும் மனநிலையே குடும்ப நோக்கம் என்பதனை உணர்ந்திருந்தனர். குடும்பம் என்பது அன்பை அடிப்படையாகக் கொண்டது. அன்பின் இருக்கையாக அறத்தின் விளை நிலமாய்க் குடும்ப வாழ்க்கை அமைதல் வேண்டும். உலக வாழ்வுக்கு அடிப்படை இல்லறம் அஃது ஒத்த ஆணும் பெண்ணும் உடலாலும், உள்ளத்தாலும் இரண்டறக் கலந்து இனிய நெறியோடு வாழ்தலே இல்லறத்திற்கு ஏற்றது. மனைவி தரும் அன்பு கற்பு வாழ்க்கையின் அனைத்து நலன்களுக்கும் ஊற்று. இதனையே தொல்காப்பியர்,

**உயிரினும் சிறந்தன்று நாணே நாணினினும்**
**செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று**

(தொல்-பொருள்-களவியல்-23)

என மொழிவர். திருமணம் புரிந்து கொண்டு தலைவனும் தலைவியும் எப்படி வாழ வேண்டும் எனக் கூறியுள்ளனர். இதனையே வள்ளுவர்

**பெண்ணின் பெருந்தக்கயாவுள கற்பென்னும்**
**திண்மை உண்டாகப் பெறின்.** (குறள்-54)

என்பார். கற்புடைய பெண் கணவனைத் தெய்வமாகப் போற்றுவாள். இல்லறத்தில் இன்பம் பெருக மனையறத்தின் மாண்பாம் கற்புடைமை வேண்டும். அவள் தன் கணவனுக்கு நண்பனாகவும், அமைச்சராகவும் தாரமாகவும் வாழ்வாள். மனைவி தனக்கும் கணவனுக்கும் உள்ள பிறவித் தொடர்பை,

**இம்மை மாறி மறுமை யாயினும்**
**நீயாகிய ரென் கணவனை**
**யானாகியர் நின்நெஞ்சு நேர்பவளே** (குறுந்-49)

**தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுது எழுவாள்**

**பெய்எனப் பெய்யும் மழை** (குறள்-55)

எனக் கூறுகிறாள். எக்காலத்துக்கும் தானே மனைவி என்ற உரிமைப் பேச்சு இல்லற ஆளுமையை வெளிக்கொணருகிறது. நெஞ்சத்து நீங்காதான் தாள் வாழ்க என இறைவனோடு இரண்டறக்கலக்கும் அடியவர்களின் பக்தி பெருக்கும் சங்கத் தலைவன் தலைவியரின் அன்புப் பெருக்கும் எண்ணி இன்புறற்குரியன. திருமணம் புரிந்து இல்லறம் நடத்துவது இன்பத்திற்காக மட்டுமன்று, அன்பு பூண்டு அறவழி நிற்றலுக்குமாகும்.

**அன்பே இல்லற மாண்பு**

இல்லற வாழ்க்கையில் இணையும் கணவன் மனைவி இருவரும் ஒருவர் மீது ஒருவர் வைத்திருக்கும் அன்பு முதுமையிலும் தொடர்ந்து வரக்கூடிய அளவு வலிமை பெற்றிருக்க வேண்டும். அன்பானது வளர்பிறை போன்று நாளும் வளர்ந்து பூரணமடைய வேண்டும். இல்வாழ்க்கையே ஒருவனுக்கு உலகத்தை நேசிக்கக் கற்றுத் தருகிறது இதனையே வள்ளுவர்

**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை.** (குறள்-41)

இல்வாழ்வின் மேன்மையை இக்குறள் மூலம் அறியலாம்.

திருமணம் ஆன புதிதில் தலைவனும் தலைவியும் இல்லறம் நடத்தும் பாங்கினை அறிய நினைப்பது இயல்பு. அவர்கள் இல்லறம் நடத்தும் சிறப்பினைக் காண்பதற்கு செவிலி தலைவியின் இல்லத்திற்குச் செல்வது வழக்கம். அப்போது அங்கே தான் கண்ட காட்சி ஒன்றை நற்றாய்க்கு எடுத்து உரைப்பதாக அமைந்துள்ளது குறுந்தொகை பாடல் ஒன்று. செல்வம் மிகுந்த குடும்பத்தில் பிறந்தவள் தலைவி. அவள் தலைவனுக்காகத் தானே சமைக்க முற்படுகிறாள். கெட்டியான தயிரைத் தன் காந்தள் மலரைப் போன்ற விரல்களால் பிசைகிறாள். தலைவனுக்கு பிடித்த மோர்க்குழம்பு செய்கின்றாள். தலைவி அணிந்திருக்கும் புத்தாடை சமையல் செய்யும் பரபரப்பில் இடையிலிருந்து நெகிழ்கின்றது. இந்நிலையில் தலைவி விரல்களைக் கழுவிக் கொள்ளாமலே ஆடையை சரி செய்கிறாள். இதற்கிடையே தலைவியின் குவளையைப் போன்ற கண்ணில் புகையானது பட்டு எரிகின்றது. அடுப்பு எரியாமல் இருக்கின்றது அதனை சரிசெய்ய வேண்டும். இத்தனை இடையூறுகளையும் பொறுத்துக்கொண்டு தான் தயாரித்த உணவை தன் கணவனுக்குப் படைத்தாள். அந்த உணவின் சுவை உணர்ந்த கணவன் இனிது இனிது எனக் கூறிப் புகழ்ந்து பாராட்டி மகிழ்ந்து உண்டான். கணவனின் புகழ்மொழியைக்கேட்ட மனைவி மகிழ்ந்து நாணி அவளுடைய நெற்றி எங்கும் வியர்வைத் துளிகள் அரும்பின இக்காட்சியைக் கூடலூர்கிழார் என்ற புலவர்

**முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ,**
**குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்**
**தூன் துழந் தட்ட தீம்புளிப் பாகர்;**
**இனிதெனக் கணவன் உண்டலின்,**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே** (குறுந்-167)

அழியா ஓவியமாகப் படைத்துள்ளார். மனைவி வைத்தது புளிக்குழம்பு ஆனால் அதை கணவன் இனிது எனக்கூறி உண்டான். அவர்கள் இருவருக்குமிடையே இருந்த அன்பின் மாண்பு புளிச்சுவையையும் இனிப்புச் சுவையாகக் கருதுகிறான் தலைவன். இது இல்லற வாழ்வில் தன் இல்லாளிடம் குறையே காணாத தலைவனின் உயர்ப்பண்பைப் புலப்படுத்துகிறது. அதோடு நின்று விடாமல் இக்குறுந்தொகைப் பாடல் இன்றைய கணிபொறி உலகத்திலும்,நவீன யுகத்திலும் அன்பை விதைத்துக் கொண்டே இருக்கின்றது என்பது உறுதியாகும். அன்பில்லாக் கணவன் மனைவிக்கு இது ஒரு பாடமாகவும் அமைகின்றது.

**ஈருடல் ஓர்உயிர்**

இல்லத்தை ஆட்சி செய்யும் மனைவி, சமூகத்தின் அச்சாணியாக விளங்குகிறாள். அன்பே இல்வாழ்க்கையின் அடிப்படையாகத் திகழ்வதாகும். அன்பு சென்ற வழிதான் உள்ளமும் செல்லும். காதலர் வாழ்வில் பல சோதனைகள் சூழ்ந்தாலும், காதலின் ஆழத்தை வலியுறுத்திக் கூறும் போக்கு காணப்படுகிறது. கதிரவன் இருக்கும் திசை நோக்கித் திரும்பி நிற்கும் நெருஞ்சிப் பூப்போல கணவன் விருப்பத்தை நோக்கி அதற்கு இசையும் நெறிமுறை பூண்டு நிற்கிறாள் மனைவி. இதனைக் குறுந்தொகைப்பாடல் ஒன்று அழகுற எடுத்துரைக்கின்றது.

**“எழுதரு மதியங் கடற்கண் டாஅங்கு**
**ஒழுகு வெள்ளருவி ஓங்கு மலைநாடன்**
**ஞாயிறு அனையன் தோழி**
**நெருஞ்சி யனையஎன் பெரும்பணைத் தோளே”** (குறுந்-315)

தலைவன் ஞாயிறு அணையவன்,ஞாயிற்றை எதிர்நோக்கி நிற்கும் நெருஞ்சி மலர் அனையவள் தலைவி என்பது இப்பாடல் பொருள் ஆகும்.

நீரில் வாழும் மகன்றில் பறவை. ஆணும் பெண்ணுமாய் இணை பிரியாது வாழும் தன்மை கொண்டது. சிறிது பிரிந்தாலும் துயர் ஆற்றாது. அதுபோலப் பல பிறவிகளாய்த் தொடர்ந்து வரும் நட்புடைய நாங்கள் நெஞ்சினாலும், உயிராலும் ஒன்றுபட்டிருப்பினும் கடமையை ஆற்றுவதற்காக இருவேறு உடல்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை

**பூஇடைப் படினும் யாண்டு கழிந்தன்ன**
**நீர் உறை மகன்றில் புணர்ச்சி போலப்**
**பிரிவு அரிது ஆகிய தண்டாக் காமமொடு,**
**உடன் உயிர் போகுக தில்ல கடன் அறிந்து**
**இருவேம் ஆகிய உலகத்து**
**ஒருவேம் ஆகிய புன்மைநாம் உயற்கே** (குறுந்-57)

தலைவி உடன் உறையும் நாளில் உயிர்நீங்கப் பெற்றால் மீண்டும் நட்புடையவராய்ப் பிறப்போம் என்னும் நம்பிக்கை அவள் உள்ளத்தில் ஆழப்பதிந்துள்ளது. ஒருவர் இறக்கும் போது உள்ள நினைப்பே அடுத்த பிறவியிலும் தொடரும் என்று கூறப்படும் வழக்கத்தை நினைத்துத்தான் தலைவி இவ்வாறு கூறினாள். இதனால் தலைவைனும் தலைவியும் ஒருவர் மீது மற்றவர் கொண்டிருக்கும் ஆழ்ந்த அன்பு வெளிப்படுகின்றது.

**விருந்தோம்பல் பண்பு**

விருந்தினரைப் பேணுவதைச் சிறந்த இல்லறப் பண்பாகப் போற்றினர் பண்டைத் தமிழர். மனிதனுக்குரிய சிறந்த பண்புகளில் ஒன்று விருந்தோம்பலாகும். மனைவிக்குரிய மாண்புகளுள் ஒன்றாகச் சுட்டுகிறது. இக்கருத்தினை வள்ளுவரும் கூறுகின்றார்

**வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**
**பருவந்து பாழ்படுதல் இன்று** (குறள்-83)

குறுந்தொகையில் பழந்தமிழரின் நாகரிகப் பண்பாட்டுக் கூறுகளில் விருந்தினரைப் பேணுதல் சிறப்புப் பெறுகிறது. வீட்டிற்கு விருந்தினராக வந்தவர்க்கு அவர் மகிழும் வண்ணம் அமுது படைத்து, தம் அன்பை வெளிக்காட்டுவது தமிழர்தம் பண்பாகும். இரவில் வீட்டுக்குள் உணவு உண்ணும் பொருட்டு அழைத்து வந்து உபசரிக்கும் பழக்கம் இருந்ததை

**புள்ளும் மாவும் புலம்பொடுவதிய**
**நள்ளென வந்த நார் இல்மாலை**
**பலர் புகுவாயில் அடைப்பக் கடவுனர்**
**வருவீர் உளீரோ எனவும்** (குறுந்-118)

நன்னாகையார் பாடல் வழி காண முடிகின்றது.இரவு கதவைடைக்கும் முன்பு விருந்தினர் உள்ளார்களா எனக் கேட்டுக் கதவை அடைத்தனர் என்பதையும் அறிய முடிகின்றது.இதனையே பாரதிதாசனும்

**வந்த விருந்தினர்க்கு**
**வாழ்த்துரைத்துக் கையூன்றி**
**நொந்த படி யெழுந்தார்**
**நோய்க்கிழவர்-அந்தோ**

என்று முதிர்ந்த தளர் நடையிலும் கையூன்றித் தனது நோயையும் பொருட்படுத்தாமல் படியிறங்கி வந்த விருந்தினரை வரவேற்கும் பெருமைப்படைத்த பெண்டீர் வாழும் நம் தேசம் என்கிறார்.

**குழந்தைப்பேறு**

குடும்பத்துக்கு எல்லா நன்மைகளையும் உண்டாக்கக் கூடிய மங்கலப் பொருள் மனையாளின் பெருமைதான் அந்த பெருமைக்கு அழகு தரும் ஆபரணங்கள் மக்களைப் பெறுவதுதான் என்பதை

**மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**
**நன்கலம் நன்மக்கட்பேறு** (குறள்-60)

என்று வள்ளுவர் உரைக்கின்றார்.

தலைவன் தன்மகனுடன் விளையாடிக்கொண்டு இருக்கிறான். காதல் மேலீட்டால் மகனை மார்பில் அணைத்து இறுகத் தழுவிக் கொண்டான் அவன். அருகில் அமர்ந்திருந்த மனைவி, அவர்கள் இருவரையும் ஒருங்கே தன் இருகைகளாலும் அணைத்துக் கொள்கிறாள். அன்பு நிறைந்த காட்சியை அழகுடன் குறுந்தொகைப்பாடல் காட்டுகின்றது.

**பள்ளி யானையின் உயிர்த்தனன் நசைஇ,**
**புதல்வற் தழீஇயினன் விறவலன்;**
**புதல்வன் தாய் அவன் புறம் கனவஇ யினளே.** (குறுந்-359)

தாய்மடி பிள்ளைக்கு சொர்க்கமாக இருந்தாலும் குழந்தைப்பேறு தான் தாய் தந்தையருக்கு எல்லாச் செல்வமுமாகவும் உண்மைச் செல்வமுமாகவும் கருதப்படுகின்றது.குழந்தைப் பேறு தான் வாழ்க்கையின் பேறாகவும் இல்லறத்தின் இன்பமாகவும் உணர முடிகின்றது.

**முடிவுரை**

பண்டைத் தமிழர்களின் இல்லற வாழ்வு மிகவும் உயர்ந்த உன்னத கொள்கைகளை உடையதாகவும் இல்லறத்தை நல்லறமாகப் பின்பற்றினர். அன்பினை அனைத்து உயிர்களிடத்தும் காட்ட வேண்டும். அன்பினால் மட்டுமே அனைத்தையும் வெல்ல முடியும். சிறந்த ஒழுக்கத்தை நூலறிவு மூலம் பெற இயலாது.நல்ல ஒழுக்கம் இருந்தால் தான் அறிவுடைய சான்றோர்களின் பண்பைப் பெற்று சிறப்புடன் வாழ முடியும் என்பதை இல்லற வாழ்வில் நிகழ்த்தினர். தன் வாழ்க்கை பிறருக்கு உதாரணமாக இருக்க வேண்டும் என்று வாழ்ந்தனர். வறுமையிலும் செம்மை, பசியிலும் வரும் விருந்தினரை உரிய முறையில் வரவேற்று உபசரித்து மகிழ்வது, குழந்தைச் செல்வம்தான் உலகத்தில் உயர்ந்த செல்வம் என இல்லறத்தை அன்பு, ஒழுக்கம்,

வாய்மை, ஈகை, விருந்தோம்பல் போன்ற குணங்களை நிரப்பி சுயநலம் இல்லாமல் பொது நலத்தோடு உலக வாழ்க்கை வாழ்ந்து மாண்பு உள்ள இல்லறம் நடத்தியதை குறுந்தொகையின் பாடல்களின் வழி அறிய முடிகின்றது.

**துணை நின்ற நூல்கள்**

இளம்பூரணர் தொல்காப்பியம் - முல்லை நிலையம்
திநகர் சென்னை-600017
பதிப்பு-2002

ச.வே.சுப்பிரமணியன் - குறுந்தொகை மூலமும் உரையும்
மணிவாசகர் பதிப்பகம்
பாரிமுனை சென்னை-600108
பதிப்பு-2010

முனைவர் வி.நாகராஜன் - குறுந்தொகை மூலமும் உரையும்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
சென்னை-600 098
பதிப்பு-2014

நாமக்கல் கவிஞர் - திருக்குறள் உரை
தமிழ்நிலையம்
தி.நகர் சென்னை-600017
பதிப்பு-2007

பாரதிதாசன் கவிதைகள் - உமா பதிப்பகம்
சென்னை-600001
பதிப்பு-2000